# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.266 of 2025 | Date | : | 16.03.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா.1** | Taluk | : | |
| Name | : | **திரு.குணசேகரன்** | Calling | : | |
| Father Name | : | **திரு.பெருமாள்** | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.03.2026.

**(1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான், சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இ காட்டுர், இடங்கணசாலை கிராமத்தில் வசித்து Watchman வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 09.07.2022 ல் காலை 10.30 மணி அளவில் சுற்றுச்சுவரை தாண்டி எனது இடத்திற்கு வந்து எனது இடத்தில் இருந்த பூண்டை**கோவிந்தன் (1–ம் எதிரி)** என்பவர் பிடிங்கிக்கொண்டிருந்தார், ஏற்கனவே, நிலப்பிரச்சனை இருந்துவரும் நிலையில் எதற்காக எனது இடத்தில் பூண்டை பிடிங்குகிறீர்கள் என்று கேட்டதற்கு தேவடியா மவனே நீ என்னடா என்னை பார்த்து கேட்குறா என்று அடித்தால் கேட்க ஆள் இல்லாத அனாதை பையனே என்றும் ஆபாச வார்த்தைகளால் திட்டி கீழே கிடந்த கட்டையை எடுத்து எனது வலதுபுறங்கை, வலது கை தோள்பட்டை, முதுகு ஆகிய இடங்களில் அடித்தார்.

2) கோவிந்தனின் மனைவி **பாலாமணி (2–ம் எதிரி)** கட்டையை எடுத்து எனது வலது கை முட்டியில் அடித்தார். கோவிந்தனின் மகன் **கோபால்(3–ம் எதிரி)** என்பவர் என்னை பார்த்து ஏண்டா தேவடியா பையா பூண்டை பிடிங்கினதுக்கு நீ ரொம்ப ஓவர பேசுற என்று கையில் வைத்திருந்த கம்பியால் எனது முன்பக்க தலையில் இரண்டு முறை அடித்தார். இதில் எனக்கு இரத்தகாயம் ஏற்பட்டது. அந்நேரத்தில் எனது அருகில் சீனிவாசன், தமிழரசன் சண்டையை விலக்கிவிட்டார்கள். தலையில் இரத்தகாயம் ஏற்பட்டதால் எனது மகள் கோகுலச்செல்வி என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் கே.கே.நகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று முதலுதவி பெற்றேன். காயம் அதிகமாக இருந்ததால் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னிடம் வாக்குமூலம் பதிவுசெய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(மேற்சொன்ன புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் இரும்புக்கம்பியால் தான் மூன்றாம் எதிரி தான் என்னை தலையில் தாக்கினார். **(மேற்சொன்ன இரும்புக்கம்பி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கின் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் நான் எதிரிகள் மீது பொய்யாக புகார் மனு அளித்து, இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness -

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D.Sivakumar

**Judicial Magistrate No.II,**
**Sankari.**